

அனுமன் திருத்தாண்டகம்



அனுமன் திருத்தாண்டகம்

வள்ளி பதிப்பகம்
5, காளப்பன் வீதி, காட்டூர்,
கோயமுத்தூர் - 641 009.

ரூபாய் 4–50

4-2

அன்புடையீர்,

வணக்கம்.

அனுமன் - இந்த நாமமே நமக்கு ஆற்றலை அருளும் அற்புத மந்திரமாக விளங்குகிறது. அனுமன் என்ற சொல்லுக்கே ஒழுக்கத்தின் தலைவன் என்றுதான் பொருள்.

தொண்டிற்கு இலக்கணமாகவும், உண்மையான பக்தி நிலைக்கு முழுவடிவமாகவும் விளங்குகின்ற அனுமனின் விசுவரூபத்தை நினைத்தாலே மெய்யெலாம் சிலிர்க்கிறது. எத்தனை பூரிப்பு, எத்தனை கொண்டாட்டம்.

வீரத்தையும், பக்தியையும், புலனடக்கத்தையும் நமக்கு ஊட்டி நம் வாழ்விற்கு ஒளி தந்து நெறிப்படுத்துகிற தாயன்புத் தூயோனாம் அனுமனை நினைக்க, நினைக்க உண்டாகும் உவகைக்கு எல்லையே இல்லை.

அந்த உண்மைக்களிப்பின் வெளிப்பாடே இச்சிறு பாடல்கள்.

இன்புற வேண்டுகிறேன்.

அன்புடன்
ரெங்கலெ. வள்ளியப்பன்

31/3/2006
கோயமுத்தூர்.

வான்உரசும் தோளானை வளர்உருவம் கொண்டானை
வடதிசையில் தோன்றுமெழில் முழுமதியை ஒத்தானை
ஆன்றபுவி அத்தனைக்கும் அச்சாணி போன்றானை
அடுக்கான உலகெங்கும் வலம்செய்த வாலானை
ஈன்றானை மேம்பட்டு அறிவிலுயர் நின்றானை
எண்ணத்தை மிக்குயர்ந்த வேகத்தைப் பூண்டானை
ஊன்றிமிகப் பிடித்தே உள்ளத்தே வைத்தேனே
ஊக்கமுடன் களிப்போடு வாழ்வேனே பல்லாண்டு

மின்னல்மேல் படர்வானை மேருவென நின்றானை

மெய்யெடுத்து அணிந்தானை மேதகனை மாருதியை

பொன்னொத்த நிறத்தானை போரேறு ஆனானை

புகைநுழையா இடத்தினிலும் புகுந்துவரும் திறத்தானை

தன்மனத்தின் முன்செல்லும் தந்திரங்கள் தெரிந்தானை

தக்கானை குணநிதியை தருமத்தின் தூதானை

ஒன்றிநான் பிடித்தே உள்ளத்தே வைத்தேனே

ஊக்கமுடன் களிப்போடு வாழ்வேனே பல்லாண்டு

நீதியிலே நிலைத்தானை நிலைத்தபுகழ் பெற்றானை
நெறியானை நிதிவளரும் அறம்பொருளை நிரப்புவானை
வேதமுழு துணர்ந்தானை வித்தகனை விரிந்தானை
விசித்திரனை விசையானை விளக்கெனவே ஒளிர்வானை
ஆதித்தன் திகழ்வானின் வழியேயும் செல்வானை
ஆற்றலினை ஒளிக்குன்றை அழுக்கில்லா மனத்தானை
ஓதிநான் பிடித்தே உள்ளத்தே வைத்தேனே
ஊக்கமுடன் களிப்போடு வாழ்வேனே பல்லாண்டு

போகத்தில் தாழானை போர்ஆழி ஆனானை
பூரணனைப் பொறியானை புகழ்பூத்த வெற்றியானை
மோகத்தில் வீழானை முதலானை முயற்சியானை
முழுமுதலின் புகழ்பரவும் உலகமெலாம் பரவுவானை
யோகத்தில் நிற்பானை உத்தமனை ஒப்பிலானை
யுகமுடிவுக் காற்றே போல்உருக் கொள்வானை
ஊகத்தில் பிடித்தேஎன் உள்ளத்தே வைத்தேனே
ஊக்கமுடன் களிப்போடு வாழ்வேனே பல்லாண்டு

விரிவானை குறுகுவானை வினைப்பகையை வென்றானை

விற்பெரிய தடந்தோளன் அம்பேபோல் விரைவானை

கருடனையும் ஒப்பானை கடல்கடந்த தாளானை

கரியதிருப் பெருமானே கதியென்னும் அனுமானை

பெரியானைக் கோளரியை பெருமலையாய் நீண்டானை

பெருமாலை பலதங்கும் திருமார்பை உடையானை

உரிமையெனப் பிடித்தேஎன் உள்ளத்தே வைத்தேனே

ஊக்கமுடன் களிப்போடு வாழ்வேனே பல்லாண்டு

அறிவானை சுருதியானை அம்பரிதி மார்பினானை

ஆழியின் நடுவேநின்ற மந்தரமலை போல்வானை

நிறைவுநேர் பண்பினானை நெடுந்தகை அன்பினானை

நியமனை நீதியானை நேமியான் தொண்டனானை

செறிவினை செருக்கிலானை செங்கோடு வெற்பினானை

செம்மையை பரிவுதீர்த்த சிறந்ததோர் கொடையினானை

உறவினைப் பிடித்தேஎன் உள்ளத்தே வைத்தேனே

ஊக்கமுடன் களிப்போடு வாழ்வேனே பல்லாண்டு

விழுமிய குணத்தினானை வீரனை வெறியிலானை
விண்ணினை முட்டும்தூய கயிலையை ஒப்புவானை
அழகனை அழிவிலானை அயர்வையே அறிந்திலானை
அருளுடை வாழ்வினானை அன்னைக்கே உயிர்தந்தானை
மழவனை மறையினானை மாணிஆம் வேடத்தானை
மாமேரு கீழேதோன்ற வானுளும் வளருவானை
ஒழுங்கினைப் பிடித்தேஎன் உள்ளத்தே வைத்தேனே
ஊக்கமுடன் களிப்போடு வாழ்வேனே பல்லாண்டு

புலன்ஐந்தை வென்றானை பொன்னானை பொய்யிலானை
பூத்தமரம் போல்புண்ணால் பொலிகின்ற உடலினானை
நிலவுசெயும் முகத்தானை நிர்மலனை நீதவானை
நிறைகுணனை நேர்மையனை நெடியோனின் அடியானை
இலங்கையினை எரித்தானை யாவரினும் பெரியோனை
இராகவனின் கீர்த்தியெனும் வடிவானை அனுமானை
உலகுயரப் பிடித்தேஎன் உள்ளத்தே வைத்தேனே
ஊக்கமுடன் களிப்போடு வாழ்வேனே பல்லாண்டு

அனலினை கொற்றவாலை ஆண்தகை வலிமையானை

அயன்படை என்னும்கோப அரவினால் கட்டுண்டானை

நினவரும் செயல்முடிப்பான் நெஞ்சிலே குடிகொண்டானை

நீண்டதோள் ஆற்றலுக்கே எல்லையென்றில்லையானை

நினைவுடைச் சொற்கள் சொல்ல நீர்த்துளி சிந்துவானை

நெறியினை தவத்தினாளை உயிர்க்குமேல் போற்றுவானை

உனைதேடிப் பிடித்தேன் உள்ளத்தே வைத்தேனே

ஊக்கமுடன் களிப்போடு வாழ்வேனே பல்லாண்டு

காற்றினை கலைவல்லானை கடமையே கண்என்பானை

கவிக்குலத் திலகம்என்னும் தகைமைக்கும் தலைஎன்பானை

ஆற்றினை அகலத்தானை அரும்பெரும் இமயத்தூணை

அயன்புகழ் பெருமைகாத்த மணிநெடு வால்கொண்டானை

கூற்றினைப் பொடிசெய்வானை கொற்றமா களிறென்பானை

கொள்கையே உயிரென்பானை குறையொன்றும் இலையென்பானை

ஊற்றினைப் பிடித்தேன் உள்ளத்தே வைத்தேனே

ஊக்கமுடன் களிப்போடு வாழ்வேனே பல்லாண்டு

வாழ்த்து

சவுருடை நெற்றி வாழ்க
குண்டலச் செவிகள் வாழ்க
நீர்வரும் விழிகள் வாழ்க
நேர்ப்புறு நாசி வாழ்க
சீர்மயிர்ப் பரப்பு வாழ்க
செம்மையே பொழிவாய் வாழ்க
ஆர்முகம் வாழ்க வெற்றி
அனுமன்பேர் வாழ்க வாழ்க

கோளொத்த மேனி வாழ்க
கூப்பிய கைகள் வாழ்க
தோளெனும் குன்றம் வாழ்க
தூயபொன் அடிகள் வாழ்க
நீள்பெரு வாலும் வாழ்க
நிமிர்உரு ஆகம் வாழ்க
ஆளிநேர் வீரம் வாழ்க
அனுமன்சீர் வாழ்க வாழ்க

அற்புதக் கீர்த்தன் வாழ்க
அஞ்சனைச் சிறுவன் வாழ்க
சொற்பெருஞ் செல்வன் வாழ்க
சுந்தரத் தண்ணல் வாழ்க
கொற்றவை ஏந்தல் வாழ்க
கோதண்டம் அனையன் வாழ்க
நற்றவன் அனுமன் வாழ்க
நல்லறம் வாழ்க வாழ்க

